# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No. 64/2020** **L.W.1** **P.W.1**

Name : மணிகண்டன்
Father/Husband Name : கிருஷ்ணன்
Age : 30
Village : கொடிக்களம்
Taluk : திட்டக்குடி
District : கடலூர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் எழுத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 08.03.2020 –ம் தேதி மாலை 04.30 மணிக்கு எனது தகப்பானார் கிருஷ்ணனுக்கு விபத்து ஏற்பட்டது. அப்பொழுது எனது தகப்பனார் கிருஷ்ணன் எழுத்தூர் பஸ்ஸ்டாண்டு பக்கத்திலுள்ள மளிகை கடையில் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டிருந்தார். வாங்கிவிட்டு திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு பக்கம் ஓரமாக நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது திருச்சி – சென்னை போகும் திசையில் அந்த தேசிய நெடுஞ்சாலையில் கார் ஒன்று வேகமாகவும், ஓட்டுனரின் கவனக்குறைவாகவும் வந்து என்னுடைய தகப்பனார் கிருஷ்ணன் மீது மோதிவிட்டது.

**2.** அதனால் எனது தகப்பனாருக்கு தலையிலும், காலிலும், இடுப்பிலும் பலத்த அடிப்பட்டது. அங்கு நின்றுக்கொண்டிருந்த மருதமுத்து என்பவர் என்ககு தொலைபேசியில் அவ்வாறு என் தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார். பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்அேதன். ஆம்புலன்ஸ் வந்த பிறகு எனது தகப்பனாரை ஏற்றிக்கொண்டு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம்,. பிறகு மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்தவாறு கொண்டு சென்று சேர்த்தோம்.

**3.** பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இரக்கும்போது என்னிடம் ராமநத்தம் போலிசார் வந்து புகாரைப்பெற்றுக்கொண்டார்கள். புகாரை நான்தான் எழுதினேன். பிறகு கையொப்பம் இட்டேன். புகார் **அ.சா.ஆ.1** ஆகும். எனது தகப்பனார் திருச்சி அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சையிலிருந்தார். பிறகு 12.03.2020 அன்று அதிகாலை 5.30 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். மருத்துவர் பிரேத பரிசோதனை செய்தார்கள். பிறகு எனது தகப்பனாரின் உடலைப் பெற்று நல்லடக்கம் செய்தோம். என்னை போலிசார் திருச்சி மருத்துவமனையில் எனது தகப்பனாரை

அனுமதித்த பிறகு ராமநத்தம் காவல் நிலையத்திற்கு வந்து வாக்குமூலம் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜரில்லை. நீதிமன்ற சாதரண அலுவல் நேரம் முடிந்து விட்டதால் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.**